**தலைப்பு 295 - வாணிபத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 295 - வாணிபத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடங்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 செப்தம்பர் 25 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புகள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதிஏற்பாடும் செலவும்**

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 120.79 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் வரையில் இதில் ரூபா 119.24 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய ஏற்பாட்டிலான சேமிப்பு ரூபா 1.55 மில்லியன் அல்லது 1.28 சதவீதமாகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 110.29 | 109.12 | 1.17 | 1.06 |
| மூலதன | 10.50 | 10.12 | 0.38 | 3.62 |
| **மொத்தம்** | **120.79** | **119.24** | **1.55** | **1.28** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 29501 விடய இலக்கம் கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் பின்வருமாறாகும்.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 4.00 | 4.00 | 2.00 | 4.14 | 20.00 | 11.85 |

## 2.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வாணிபத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளது.

## 3. போதியளவும் பொருண்மையானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

### பாதீட்டு முரண்

07 செலவின விடயங்களுக்கு மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் நிதியேற்பாட்டினை பயன்படுத்திய பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 08 சதவீதம் முதல் 42 சதவீதம் வரையான வீச்சிலான பெறுமானமொன்றைக் கொண்டிருந்தது.

## 3.2 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

29501 விடய இலக்கம் கொண்ட அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றில் கடந்த வருடத்தில் தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் திணைக்களத்தின் புத்தகங்களின் படியான மீதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 121,426 ஆன வேறுபாடொன்று நிலவியதுடன், அந்த வேறுபாடு மீளாய்வாண்டின் போது ரூபா 416,550 வரை அதிகரித்திருந்தது. இதற்கான காரணத்தை வெளிக்கொண்டு வருவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) வெளிநாட்டு தூதரங்களில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் கூடுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளமை இனங்காணப்பட்டு அந்த

மீதிகளுக்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றமையால், தனிப்பட்ட மீதிகள் பதிவேட்டின் கூட்டுத்தொகை தொடர்ந்தும் குறைவடைந்திருந்ததுடன், அதற்கமைய திணைக்களத்தின் புத்தகங்களுடனான வேறுபாடு அதிகரித்திருந்தது. 2004 ஒக்டோபர் 11 ஆந் திகதி 118 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்திக்கமைய ஒவ்வொரு மாதத்தினதும் இறுதியில் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியை சீ.சீ.10 பதிவேட்டின் மீதியுடன் இணக்கம் செய்யும் கூற்றொன்று தயாரிக்கப்படாமையால் இவ்வாறான நிலமை உருவாகியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

**3.3 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்**

**உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்காததுடன், அந்த பணிகள் கைத்தொழில்கள் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு அலகிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த அலகினால் போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயலாற்றல்**

திணைக்களத்தின் பிரதான பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கையின் ஒட்டுமொத்த இறக்குதி, ஒட்டுமொத்த ஏற்றுமதி, ஒட்டுமொத்த வியாபாரம் மற்றும் வர்த்தக மீதி தொடர்பான தகவல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| செயற்பாடு | 2016 | 2015 | முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக அதிகரிப்பு / (குறைவு) | அதிகரிப்பு / (குறைவின்) சதவீதம் |
|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | |
| ஏற்றுமதி | 10,217 | 10,212 | 5 | 0.05 |
| இறக்குமதி | 19,515 | 18,989 | 526 | 2.77 |
| ஒட்டுமொத்த வர்த்தகம் | 29,732 | 29,201 | 531 | 1.82 |
| வர்த்தக மீதி | (9,298) | (8,777) | (521) | (5.94) |

மேற்படி தரவுகளுக்கமைய 2016 ஆம் ஆண்டின் போது இலங்கையின் ஒட்டுமொத்த ஏற்றுமதி மற்றும் ஒட்டுமொத்த இறக்குமதியினை 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ஏற்றுமதி பெறுமதி ஐ.அ.டொலர் 5 மில்லியன் அல்லது 0.05 சதவீதத்தால் மாத்திரம் அதிகரித்திருந்ததுடன், இறக்குமதி செலவினமும் ஐ.அ.டொலர் 526 மில்லியனால் அல்லது 2.77 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இதன் காரணமாக வர்த்தக மீதியின் நிலுவை ஐ.அ.டொலர் 9,298 மில்லியனாக இருந்தது. அவ்வாறாயின் 2015 ஆம் ஆண்டை விட வர்த்தக மீதியின் நிலுவை ஐ.அ.டொலர் 521 மில்லியனால் அதிகரித்திருந்தது. ஆகையால், இலங்கையின் ஏற்றுமதி சந்தையில் பரவலாக்கல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணியொன்றானமையால், ஏற்றுமதி வருமானத்தை எதிர்வரும் வருடங்களில் அவதானிப்பதற்காக இரு தரப்பு, வலய மற்றும் பல்தரப்பு மட்டங்களிலான வெளிநாட்டு வர்த்தக தொடர்புகளை அபிவிருத்தி செய்வதற்காக தொடர்ந்தும் வாணிய உத்தியோகத்தர்களின் நேரடியான தலையீட்டின் தேவைப்பாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) வெளிநாட்டு வணிக பிரதிநிதித்துவம் தொடர்பினால் வாணிப உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் பொழிப்பு பின்வருமாறு.

| செயற்பாடுகள் | 2016 | 2015 | மீளாய்வாண்டின் அதிகரிப்பு /(குறைவு) | அதிகரிப்பினது (குறைவினது) சதவீதம் |
|---|---|---|---|---|
| மேம்படுத்தல் கண்காட்சிகளுக்காக துணை நாடுகளுக்கு இலங்கையின் பங்குபற்றல் | 485 | 247 | 238 | 96.36 |
| துணை நாடுகளில் இலங்கை விசேட (தனிநாடு) விளம்பர நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 49 | 63 | (14) | (22.22) |
| இலங்கைக்கான வெளிநாட்டு தூதுவர்களின் வருகை | 770 | 575 | 195 | 33.91 |
| துணை நாடுகளில் சுற்றுலாவில் ஈடுபட்ட தூதுவர்கள் | 1005 | 888 | 117 | 13.18 |
| துணை நாடுகளுக்கான தனியார் சுற்றுலா பயணிகள் | 224 | 141 | 83 | 58.87 |
| இலங்கைக்கான பிரத்தியேக சுற்றுலா பயணிகள் | 253 | 153 | 100 | 65.36 |

மேற்படி தரவுகளின் பிரகாரம், துணை நாடுகளில் இலங்கை விசேட (தனிநாடு) விளம்பர நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் முன்னைய ஆண்டைவிட 14 நிகழ்ச்சித்திட்டங்களால் அல்லது 22 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அதனால் இலங்கையினுள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டினை மேம்படுத்துவதற்காக வாணிப பிரதிநிதிகளின் நேரடி தலையீட்டின் அடிப்படையில் சுற்றுலா சந்தர்ப்பங்களை அறிமுகப்படுத்துவதற்கான தேவைப்பாடு நிலவியது.

(இ) பிரதி வாணிப பணிப்பாளரின் வேண்டுகோளின் அடிப்படையில் களஞ்சியத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவரால் களஞ்சியத்திலுள்ள அச்சிடப்பட்ட சான்றிதழ் பத்திர இருப்புக்கள், பொருட் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு கொள்கைகள் பிரிவின் உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து கையொப்பத்தினை பெற்றுக் கொண்டதன் பின்னர் அந்த பிரிவிற்கு விநியோகிக்கப்படும். களஞ்சியத்தினால் விநியோகிக்கப்படும் வெற்று சான்றிதழ் பத்திரங்களின் இருப்புக்கள் அலுவலகத்தின் அலுவலக உதவியாளர் ஒருவரால் கையொப்பமிட்டு பொறுப்பேற்கப்படுவதுடன், சான்றிதழ் பத்திர இருப்பின் பாதுகாப்பு தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பணிகளையும் நிறைவேற்றுவதிலான செயன்முன்னேற்றம் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 முகாமைத்துவ செயற்திறனின்மை

ஏற்றுமதியாளருக்கு வழங்கப்பட்ட போக்குவரத்து சான்றிதழ்களில் திணைக்களத்தின் பிரதி திணைக்கள வளாகத்தில் ஆங்காங்கே முறையற்ற விதத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்ததுடன், இதன் காரணமாக அந்த பிரதிகளின் பாதுகாப்பிற்கு மற்றும் நிறுவனத்தின் கவர்ச்சியான தோற்றத்திற்கு பாரிய சேதமாகியிருந்தது. மேலும் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு உளரீதியான ஒருங்கிணைப்பாட்டுடன் கடமைகளை மேற்கொள்வதற்கும் அதனால் பாரிய தடையொன்று நிலவுவதாக அவதானிக்கப்பட்டது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக முகவர்களுடன் இடைத் தொடர்புகளை பேணிச் செல்லும் ஒழுங்குபடுத்தல் நிலையமொன்றான இந்த திணைக்களத்தின் உள்ளக சூழலை முறையாக திட்டமிடுவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | பதவியணியின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 65 | 49 | 16 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 02 | 0 |
| (iii) | இரண்டாம் நிலை | 61 | 46 | 15 |
| (iv) | ஆரம்ப நிலை | 21 | 16 | 05 |
| | **மொத்தம்** | 149 | 113 | 36 |

(ஆ) இலங்கையின் சர்வதேச வணிக நடவடிக்கைகளுக்காக வசதிகளை வழங்கும் நிறுவனமொன்றான இந்த திணைக்களத்தின் பணிகளில் முக்கியமான கட்டமைப்பு பகுப்பாய்வாளர் பதவி உருவாக்கப்பட்ட திகதி முதலாகவும், நூலகர் பதவி 1999 ஆம் ஆண்டு முதலாகவும் வெற்றிடமாக நிலவியது.

(இ) திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட 06 சாரதி பதவிகள் காணப்பட்ட போதிலும், 04 சாரதிகள் மாத்திரம் சேவைகள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். எனினும் நிறுவனத்திற்கு சொந்தமான 08 வாகனங்கள் காணப்படுகின்றமையால், சாரதி பதவிகளில் நிலவும் வெற்றிடங்களின் காரணமாக 04 வாகனங்கள் குறைப்பயன்பாட்டுடன் நிலவின.

(ஈ) திணைக்களத்துடன் இணைந்ததாக சேவையில் ஈடுபட்டுள்ள கூட்டிணைந்த சேவைகளிற்குரிய பதவியணியின் 19 உத்தியோகத்தர்கள் 05 வருடங்கள் முதல் 32 வருடங்கள் வரையான கால வீச்சில் இடமாற்றம் ஒன்றினைப் பெறாது இந்த திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.